**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 113/2011 |
| Prosecution Witness | : | **அ.சா.5** |
| Name | **:** | **அப்துல்நாசர்** |
| Father's/Husband Name: | : | அப்துல்சமது |
| Address : | : | லப்பைக்குடிக்காடு, பெரம்பலூர் |
| Age | : | 59/2022 |

<u>தேதி:14/06/2022</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் நாசர் பர்னிச்சர் என்ற பெயரில் தொழில் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும். புகார்தாரர் அப்துல் ஜமீல் என்பவர் எனது உறவினர். அவரையும் எனக்கு தெரியும். இந்த வழக்கிற்கான சம்பவம் நடைபெற்று சுமார் 12 ஆண்டுகள் இருக்கும். புகார்தாரரின் தந்தை பெயர் ஜீயாவுதீன் சாயுபு. அவரது பூர்வீக நிலம் சின்னாறு பக்கத்தில் கோவிந்தசாமி நிலத்திற்கும் அருகில் அமைந்துள்ளது. அந்த நிலத்தின் அளவு 6 ஏக்கர் 79 சென்ட் ஆகும். அந்த நிலத்திற்கான பட்டா சிட்டா ஆகியவை அப்துல் ஜமீல் பெயரில் இருந்தது. அவர் வெளிநாட்டில் இருந்ததால் அந்த நிலங்களை எனது தகப்பனார் பயிரிட்டு பராமரித்து வந்தார். இந்த வழக்கின் 2 ம் எதிரியான நசீர்அகமது என்பவரின் தகப்பனாரின் பெயரும், அப்துல் ஜமீல் அதாவது புகார்தாரரின் பெயர்.

முத்தையா என்ற தாசில்தாரின் உதவியுடன் மோசடியான ஆவணங்களை மூன்று எதிரிகளும் ஒன்றிணைத்து ஏற்படுத்தியுள்ளனர். இந்த விபரம் தெரிந்தவுடன் புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை :**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***

Judicial Magistrate No.I,
Perambalur.

JMNO.I,PBLR